இக்ரா மெட்ரிக் மேனிலைப் பள்ளி – உமராபாத்

ஜூன் மாதத் தேர்வு - 2025

வகுப்பு : 12 | தமிழ் | நேரம் : 1:30
பாடம் : இயல் 1 | | மதிப்பெண் : 50

பகுதி – 1

I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக $5 * 1 = 5$

1. மயிலை சீனி.வேங்கடசாமி எழுதிய சொல்லய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு

   அ) மத்த விலாசம் ஆ) தமிழ்நாட்டு வரலாறு

   இ) அஞ்சிறைத் தும்பி ஈ) திசை எட்டும்

2. " செம்பரிதி…." எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள கவிதைத் தொகுப்பு

   அ). ஒளிப்பறவை ஆ). நிலவுப்பூ இ) சர்ப்பயாகம்
   ஈ) சூரியநிழல்

3. உயிர்மெய்க் குறில் எழுதுக்களின் எண்ணிக்கை ____

   அ) 126 ஆ) 96 இ) 216 ஈ) 1

4. சிற்பி பாலசுப்பிரமணியம் எந்த கவிதை நூலிற்க்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றார்?

   அ) ஒளிப்பறவை ஆ) சர்ப்பயாகம் இ) பூஜ்யங்களின் சங்கிலி
   ஈ) ஒரு கிராமத்து நதி

பகுதி – 2

II. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. $3 * 2 = 6$

5. விடியல், வனப்பு – இரு சொற்களையும் ஒருங்கே அமைத்து ஒரு தொடர் எழுதுக.
6. ' தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.
7. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் – இவ்விரு சொற்றொடரகள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்க.
8. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் யாவை?

III. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக $6 * 2 = 12$

9. தமிழாக்கம் தருக.
   அ). A new language is a new life.
   ஆ). Knowledge of languages is the doorway to wisdom.
10. பின்வரும் உவமைத் தொடரை சொற்றொடரில் அமைத்து எழுதுக.
    கிணற்றுத்தவளைப் போல (அல்லது) உள்ளங்கை நெல்லிக்கனிபோல
11. எவையேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    சாய்ப்பான் (அல்லது) விம்முகின்ற
12. எவையேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.
    வானமெல்லாம் (அல்லது) உன்னையல்லால்
13. இலக்கணக் குறிப்பு தருக.
    அ. வியர்வைவெள்ளம் ஆ. சிவந்து
14. கலைச்சொல் எழுதுக.
    அ. Epigrapy - ______ ஆ. Archaelogy - ____


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Padasalai.Net

IV. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. $2*4=8$

15. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?

16. "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" – இடஞ்சுட்டிப் பொருள் தருக.

17. "செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

V. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக $2*4=8$

18. பொருள் வேற்றுமை அணியை சான்றுடன் விளக்குக.

19. இலக்கிய நயம் பாராட்டுக.

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பறிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி

\- கண்ணதாசன்

பகுதி - 3

VI. எவையேனும் ஒன்றனுக்கு விரிவான விடை தருக. $1*8=8$

20. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

21. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

VII. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக $1*4=4$

22. " ஓங்கலிடை...." எனத் தொடங்கும் தண்டியலங்கார மேற்கோள் பாடலை அடிபிறழாமல் எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com